# உற்பத்தித்திறன் விருதுகள்
# 2016

கிழக்கு மாகாண சபை

## 1.0 அறிமுகம்

இலங்கையில் தேசிய உற்பத்தித்திறன் போட்டிகள் பொருளாதார அபிவிருத்தியை நோக்கமாக கொண்டு தேசிய உற்பத்தித்திறன் செயலகத்தினால் நடாத்தப்பட்டு வருகின்றது. இதன் பிரகாரம் கிழக்கு மாகாணத்திலும் இப்போட்டியை முன்னெடுக்குமாறு கிழக்கு மாகாண அமைச்சரவையினால் வழங்கப்பட்ட ஆலோசனையின் பிரகாரம் 2013ம் ஆண்டு மாகாண உற்பத்தித்திறன் போட்டி நடாத்தப்பட்டது. இதில் வெற்றிபெற்ற அமைச்சுக்கள் திணைக்களங்களுக்கு விருது வழங்கும் விழாவும் 05.09.2014 திகதியில் நடாத்தப்பட்டது.

இப்போட்டியின் மூலம் கிழக்கு மாகாணத்தில் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் மத்தியில் உற்பத்தித்திறனை மேம்படுத்தும் முதலாவது படி எடுத்து வைக்கப்பட்டது. போட்டிகளை நடாத்தியதன் மூலம் கிழக்கு மாகாண திணைக்களங்களின் சேவைகள், மனிதவளம் மற்றும் அழகிய வேலைச்சூழல் என்பனவற்றை நல்லதொரு கட்டமைப்பாக கட்டியெழுப்புவதற்கு இது அத்திவாரமாக அமைந்திருந்தது. மேலும் கிழக்கு மாகாணத்தில் திறமையான திணைக்களங்கள், உத்தியோகத்தர் குழாம் என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளதோடு ஏனையவர்களும் முன்னேறுவதற்கும் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். இப்போட்டிகளின் பிரதி பலன்களாக மாகாண மட்டத்தில் சிறந்த திணைக்களங்களை, உத்தியோகத்தர்களை உருவாக்குவதன் மூலம் தேசிய அபிவிருத்தியில் எமது கிழக்கு மாகாணத்தின் பங்களிப்பினை மேம்படுத்தி நல்லதொரு அரசை கட்டியெழுப்புவதற்கு இம்முயற்சி உதவியாக அமையுமென கருதுகின்றோம்.

## 2.0 கிழக்கு மாகாண உற்பத்தித்திறன் விருது போட்டித்தொடரின் குறிக்கோள்கள்

- தரம், உற்பத்தித்திறன் மற்றும் சேவை ஆகியவற்றை மேம்படுத்தி, நற்திறமைகளை வெளிப்படுத்துவதற்காகவும், பின்பற்றுவதற்காகவும் அனைத்து கிழக்கு மாகாண அரச நிறுவனங்களுக்கும் ஊக்கமளித்தல்.

- மாகாண மட்டத்திலான அபிவிருத்தியை மேம்படுத்தி வினைத்திறனுடன் பங்களிப்புச் செய்து கிழக்கு மாகாண மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துவதன் ஊடாக தேசிய அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்தல்.

- முன்மாதிரியான அரச நிறுவனங்கள் மற்றும் அரச ஊழியர் குழாத்தினை இனங்காணலும் மாகாண மட்டத்தில் மதிப்பிடலும்

- வளங்களை சிக்கனமான முறையில் பயன்படுத்துவதற்கும் பெறுபேற்று அடிப்படையிலான முகாமைத்துவத்தின் அடிப்படையில் நிறுவனங்களை நிரப்படுத்தி நிலையான அபிவிருத்தி ஊடாக எதிர்கால உலக சவால்களுக்கு முகம் கொடுக்கும் வகையில் கிழக்கு மாகாண அரச நிறுவனங்களை தயார்படுத்துதல்.

- கிழக்கு மாகாண அரச நிறுவனங்களை தரப்படுத்துவதன் மூலம் பொது மக்கள் நலனிற்குரிய ஓர் நிறுவன அமைப்பினை உருவாக்குதல்

## 3.0 நிறுவனங்களை வகைப்படுத்தல்

கிழக்கு மாகாண அரச நிறுவனங்கள் யாவும் மாகாண உற்பத்தித்திறன் போட்டியின் நிமித்தம் பின்வரும் அடிப்படையில் வகைப்படுத்தப்படுகின்றன

1. கிழக்கு மாகாண அமைச்சுக்களுக்கிடையிலானது
   - ஆளுனர் செயலகம், பேரவைச் செயலகம், அமைச்சுக்கள், பொதுச்சேவை ஆணைக்குழு, பிரதம செயலாளர் செயலகம், பிரதிப்பிரதம செயலாளர் செயலகங்கள்,

2. கிழக்கு மாகாண திணைக்களுக்கிடையிலானது
   திணைக்களங்கள், மாகாண மட்டத்திலான நிறுவனங்கள், அதிகார சபைகள்

3. கிழக்கு மாகாண பிராந்திய நிறுவனங்களுக்கிடையிலானது (Reginal Level)
   பிராந்திய உள்ளுராட்சி ஆணையாளர் அலுவலகம், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, மாவட்ட மட்ட நிறுவனங்கள்.

4. கிழக்கு மாகாண பிரதேச மட்ட நிறுவனங்கள். (Divisinal Level)
   - சுகாதாரத்துறை - MOH Level ( சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மட்டம்)
   - கல்வித்துறை - Zonal Level (வலயக்கல்வி அலுவலக மட்டம்)
   - உள்ளுராட்சித்துறை - Municipal Council , Urban Council, Pradeshiya Saba (மாநகர சபை, நகரசபை, பிரதேசசபை மட்டம்)

## 4.0 விருதுகளை வகைப்படுத்தல்

தளப் பரிசோதனையின் போது பெற்றுக்கொள்கின்ற மொத்தப்புள்ளிகளின் அடிப்படையில் நிறுவனங்களுக்கான விருதுகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| **A தரம் :** | 850 இற்கு மேற்பட்ட புள்ளிகள் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்கள் |
| **B தரம் :** | 750-849 இடைப்பட்ட புள்ளிகளினை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் |
| **C தரம் :** | 650-749 இடைப்பட்ட புள்ளிகளினை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் |
| **விசேட திறமை:** | 550-649 இடைப்பட்ட புள்ளிகளினை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் |
| **திறமை:** | 450-549 இடைப்பட்ட புள்ளிகளினை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்கள் |

இப்புள்ளித் திட்டம் கிழக்கு மாகாண உற்பத்திதிறன் விருதுகள் போட்டித் தொடரின் ஆலோசனைக் குழுவின் விதப்புரைகளின் கீழ் மாற்றமடையலாம்.

**A தரம்**, **B தரம்**, **C தரம்** ஆகிய இடங்களை பெற்றுக்கொள்ளும் நிறுவனங்களுக்கு விருது மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படுவதோடு விசேட, மற்றும் திறமை மட்டங்களை பெறும் நிறுவனங்களுக்கு சான்றிதழ்கள் மட்டும் வழங்கப்படும்.

## 5.0 விண்ணப்படிவம் மற்றும் மதிப்பீட்டுப்படிவம் பூரணப்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

இப்போட்டியில் பங்குபற்றுவதற்கான விண்ணப்பம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இதனை உள்ளபடியாகப் பிரதிபண்ணி அல்லது அச்சிட்டு, வினவப்பட்டுள்ள மூலப்பிரமாணங்கள்(Criteria) தொடர்பான தகவல்கள்/காரணிகளை பூரணமாக வழங்கி இப்போட்டியில் பங்குபற்றுவதற்காக விண்ணப்பிக்க வேண்டும்.

மதிப்பீட்டுப்படிவமானது பின்வரும் அறிவுறுத்தல்களுக்கு அமைய தயாரிக்கப்படல் வேண்டும்

| | |
|---|---|
| அதிகபட்ச 100 பக்கங்கள் | : பின்னிணைப்பு இல்லாமல் |
| பின்னிணைப்பு | : அதிகபட்ச 100 பக்கங்கள் |
| எழுத்தின் அளவு (fontsize) | : 11 |
| பக்க இலக்கம் | : மேலே வலது முனையில் |
| மொழி | : தமிழ் /சிங்களம் |
| வரி இடைவெளி (Line space) | : 1.5 |

தேவையான சந்தர்ப்பங்களில் மட்டும் மேலதிக தகவல்களை வழங்குவதற்காக பிரதான இணைப்புக்களின் பின்னர் மேலதிக இணைப்புக்களை இணைத்து சமர்ப்பிக்கலாம்.

**மேலதிக விபரங்களை கீழ்க்குறிப்பிடப்படும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.**

பிரதிப்பிரதம செயலாளர் – ஆளணி மற்றும் பயிற்சி
கன்னியா வீதி,
வரோதய நகர்,
திருகோணமலை

தொலைபேசி :- 026 2050605
தொலைநகல்:- 026-2222296
மின்னஞ்சல் :- hrd@ep.gov.lk

## 6.0 விண்ணப்பங்களை பொறுப்பளித்தல்

பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் இரு பிரதிகளாக **2016 ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் பிரதிப்பிரதம செயலாளர் – ஆளணி மற்றும் பயிற்சி அலுவலகத்தில் நேரடியாக கையளிக்கப்படவோ அல்லது** தபாலில் அல்லது துரிதத் தூது சேவை மூலம் உரிய திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைக்கவோ முடியும். **2016 ஆகஸ்ட் மாதம் 15ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.**

விண்ணப்பங்களை அனுப்பும்போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்ளல் வேண்டும்.

- ➢ விண்ணப்பத்தினை தபால் மூலம் அனுப்புகின்ற போது முத்திரை ஒட்டப்பட்ட உறையின் மேற்பக்கம் **“அந்தரங்கம்”** எனவும் இடது பக்க மேல் மூலையில் **கிழக்கு மாகாண உற்பத்தித்திறன் விருதுகள் 2016** எனவும் குறித்து அனுப்புதல் வேண்டும்.

- 2016 ற்கான உற்பத்தித்திறன் போட்டிக்கான விண்ணப்பபடிவம் மற்றும் உற்பத்தித்திறன் வழிகாட்டல் குறிப்பேடு என்பன கிழக்கு மாகாண இணையதள முகவரியான http://www.ep.gov.lk/ இல் இருந்து தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

- முதலாவது விண்ணப்பப்படிவத்துடன் (இணைப்பு -01) பதிவுக்கட்டணம் 5000 ரூபாவிற்கான காசோலையினையும் இணைத்து அனுப்பிவைக்கப்படல் வேண்டும். காசோலையானது "பிரதி பிரதம செயலாளர் - நிதி, கிழக்கு மாகாணம்" என வரையப்பட்டு பிரதி பிரதம செயலாளர் - ஆளணி மற்றும் பயிற்சி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் காசோலையானது இரு மாதத்திற்கு செல்லுபடியாகுமாறு வரையப்படல் வேண்டும். எக்காரணம் கொண்டும் பதிவுகட்டணம் மீளளிக்கப்படமாட்டாது

- பதிவுக்கட்டணம் இல்லாமல் சமா்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

- 2016 உற்பத்தித்திறன் மதிப்பீடு தொடா்பான படிவம் (இணைப்பு - 02) **27ம் திகதி ஜனவரி மாதம் 2017** இற்கு முன்பாக அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.
- பூரணமற்ற தகவல்களோடு முன்வைக்கப்படும் மதிப்பீட்டுப் படிவங்களுக்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

- அறிக்கை தயாா்படுத்துகின்ற போது ஒவ்வொரு மூலபிரமாணம் (criteria) தொடா்பாகவும் தகுந்த விபரங்களைக் குறித்திட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால் அதனை வெற்றிடமாக வைக்கவும்.
- பிழையான தரவுகள் தரப்பட்டு களப்பரிசோதனையின் போது அவை பிழையென உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அதற்கான புள்ளிகள் குறைக்கப்படும்.

## 7.0 விண்ணப்பித்தல் மற்றும் மதிப்பீட்டு விதிமுறை

மதிப்பீட்டு விதிமுறை இரு பிரதான சுற்றுக்களை கொண்டமைந்ததாகும். அவை யாவன,

### 7.1. முதலாம் சுற்று மீளாய்வு– முன் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களை மீளாய்தல்

முதலாவது சுற்றின் போது முன்வைக்கப்பட்டுள்ள அனைத்து அறிக்கைகளும் ஒரு தொழில்நுட்பக்குழு மூலம் மீளாய்வு செய்யப்படும். இதன் போது உரிய தரமின்றிய அறிக்கைகள் நிராகரிக்கப்பட்டு ஏனைய அறிக்கைகள் தொடா்பாக பூா்வாங்கப் புள்ளிகள் வழங்கப்படும். இதன் பின்னா் தீா்மானிக்கப்படுகின்ற தடைப் புள்ளிகளை விட அதிகமான புள்ளிகளைப் பெற்ற நிறுவனங்கள் களப் பரிசோதனைக்கு தகுதி பெறுவதுடன் தடைப்புள்ளிகளை (450 புள்ளிகளை) விட குறைந்த புள்ளிகள் பெறும் நிறுவனங்கள் போட்டிக்கான தகுதியை இழந்தனவாக கருதப்படும். அறிக்கை பூரணமற்றதாக இருப்பின் நிறுவனம் எவ்வகையான முன்னேற்றத்தை அடைந்திருந்தாலும் அனைத்து தகவல்களும் அறிக்கையில் உட்படுத்தப்படாவிடின், அந்நிறுவனமானது போட்டிக்கான தகுதியை இழந்ததாக கருதப்படும். எதிர்காலத்தில் செயற்படுத்திட உத்தேசிக்கும் அலுவல்களை/திட்டங்களை அறிக்கையில் உட்படுத்தல் கூடாது. நிறுவனத்தில் நிலவும் உண்மையான நிலையை மட்டுமே அறிக்கையிட வேண்டும்.

### 7.2. இரண்டாம் சுற்று மீளாய்வு – களப் பரிசோதனை

வேலைத்தளங்களை பரிசோதிப்பதற்கு தகைமை பெற்ற நிறுவனங்கள் களபரிசோதனைக் குழுக்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு இறுதிப்புள்ளிகள் வழங்கப்படும். இப்புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டே விருது பெறுவோர் தேர்ந்தெடுக்கப்படுவதுடன் ஆலோசனை குழுவின் முடிவே இறுதியானதாக அமையும்.

**குறிப்பு:** விருதுக்காக விண்ணப்பிக்கின்ற நிறுவனங்கள் பூர்வாங்க மீளாய்வின் (1ம் சுற்று மீளாய்வு) போது பெற்றுக்கொள்ளும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு வேலைத்தளங்களை பரிசோதிக்க வேண்டிய தேவை மற்றும் அளவு தீர்மானிக்கப்படுவதுடன், தொடர்புபட்ட வேலைத்தளங்கள் களபரிசோதனைக் குழுக்களினால் பரிசோதிக்கப்படும். இப்பரிசோதனையின் அடிப்படையான நோக்கமாக இருப்பது சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் மற்றும் அறிக்கையிலுள்ள தகவல்களை உறுதிப்படுத்திக் கொள்வதும், அறிக்கையினை மீளாய்வு செய்யும் போது ஏற்படும் சிக்கல்கள் மற்றும் தேவையானதை தெளிவுபடுத்திக்கொள்வதுமே தவிர, வேலைத்தளங்களை முழுமையாக பரிசோதித்தல் அல்ல. ஆகையால் அறிக்கையில் முன்னரே குறிப்பிடப்படாத விடயங்கள் தொடர்பாக வேலைத்தள பரிசோதனையின் போது புள்ளிகள் வழங்கபடமாட்டாது. இதனால் முன்வைக்கக் கூடிய அனைத்து காரணங்களையும் அறிக்கையில் உட்படுத்துவது அவசியம் என்பதைக் கருத்தில் கொள்ளவும்.

களப் பரிசோதனையின் போது தொடர்புபட்ட குழுவுடன் ஒரு நேர்முக கலந்துரையாடலை மேற்கொள்வதும், அறிக்கையில் உட்படுத்தப்பட்டுள்ள தகவல்களின் நிலையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு தேவையான காரணங்களை காண்பிக்க இயலுமாவதுடன், அறிக்கைக்கு உட்படாத இறுதிச் சந்தர்ப்பத்தின் போது செய்யப்படுகின்ற உடனடியான வளர்ச்சிகள் தொடர்பாக புள்ளிகளை பெறுவதற்கான வாய்ப்புக்கள் இல்லை என்பதை கவனத்தில் கொள்க.

இந் நிறுவனங்களை பரிசோதிப்பதற்கு வருகை தரும் களபரிசோதனை குழுவிற்கு தேவையான வசதிகளை அளிப்பதற்கு தொடர்புபட்ட நிறுவனம் பொறுப்பேற்க வேண்டியதோடு, களபரிசோதனை குழு உறுப்பினர்களுக்கு பரிசளித்தல் அல்லது ஏனைய தனிப்பட்ட சலுகைகளை வழங்குதல் அல்லது தனிப்பட்ட உறவுகளை ஏற்படுத்திக் கொள்ளல் கூடாது. மேலும் தவறான வழிகளால் பயன்பெற முயற்சித்தல் கடுமையாக தடைசெய்யப்பட்டுள்ளது. நிறுவன பரிசோதனையின் போது களபரிசோதனை குழு அடிப்படையான கலந்துரையாடல்களை வழிநடாத்துவதுடன் உரிய அறிக்கைகள் மற்றும் தரவுகள் மீளாய்வு செய்யும், அறிமுகப்படுத்தும் வகையிலான ஒரு சிறிய சமர்ப்பித்தலை (Presentation) செய்வதற்கு விண்ணப்பதாரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும்.

## 8.0 விருது வெற்றியாளர்களை வெளிப்படுத்தல்

2017ஆம் ஆண்டு யூலை மாதத்தினுள் இறுதிப் பெறுபெறுகள் வெளியிடப்படுவதோடு கிழக்கு மாகாண விருது வழங்கும் விழா 2017 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தினுள் நிகழ்த்துவதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வெற்றிபெறும் நிறுவனங்களின் விபரங்கள் பிரதிப் பிரதம செயலாளர் – ஆளணி மற்றும் பயிற்சி அலுவலகத்தினால் அறிவிக்கப்படுவதுடன், அது உத்தியோகபூர்வ பெறுபேறுகளாகவும் அமையும். உத்தியோகபூர்வமற்ற பெறுறேுகள் தொடர்பில் பிரதிப் பிரதம செயலாளர் – ஆளணி மற்றும் பயிற்சி அலுவலகம் பொறுப்பேற்கமாட்டாது என்பதுடன், இது தொடர்பிலான விசாரணைகளுக்கு பதிலளிக்கப்படவும் மாட்டாது என்பதையும் கவனத்தில் கொள்ளவும். பெறுபேறுகள் வெளியிடப்பட்டதன்

பின்னர் கிடைக்கப்பெறுகின்ற முறையீடுகள், மேன்முறையீடுகள் தொடர்பாக செயற்படக்கூடிய வழிவகைகள் எவையும் இல்லையென்பதும் வலியுறுத்தப்படுகின்றது.

கிழக்கு மாகாண உற்பத்தித்திறன் விருதுகள் 2016 க்குரிய மதீப்பீட்டு அளவுகோல்களும் புள்ளிகள் வழங்கும் முறையும் வருமாறு.

| மூலப்பிரமாணங்கள் (Criteria) | புள்ளிகள் |
|---|---|
| **தலைமைத்துவம்** | 200 |
| **நியமிப்பு பெறுனர்கள்** | 300 |
| **செயற்பாட்டினை மேம்படுத்தல்** | 200 |
| **சேவைபெறுனரின் திருப்தியினை மதிப்பிடல்** | 100 |
| **பெறுபேறுகள்** | 200 |
| மொத்தப்புள்ளிகள் | **1000** |